FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313234

1. District : Chennai மாவட்டம் | PS: Chennai city-I காவல்நிலையம் | Year: 2026 ஆண்டு | FIR No.: 07/AC/2026/CC-I முத.அ. எண் | Date: 31/08/2026 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Act as amended in 2018 | Sections பிரிவுகள்: 7, 7A, 12 r/w 7
(ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: U/s
(iii) Act சட்டம்: BNSS | Sections பிரிவுகள்: 106
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 27/08/2026 | Date from : நாள் முதல் 27/08/2026 | Date to : நாள் வரை Prior to 19.00 hrs

Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் | Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28/08/2026 | Time : நேரம் 16.00 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் | Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் Typed.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Pallavaram SRO office, about 12 Kms South

Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. Kavitha | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் K. Selvaraj

(c) Date / Year of Birth : 12.06.1992 நாள் / பிறந்த ஆண்டு | (d) Nationality : Indian நாட்டினம் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : Deputy Tahsildar தொழில் | (g) Address : Special Tahsildar, Land Acquisition (Natio Highways), Chengalpet District. முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) R. Devarajan, Sub-Registrar, Pallavaram SRO office, ch-44.
2) R. Muthusamy S/o Ramachandran, 81/67, Kannigan Kovil St, Pallavaram, Ch-117.
3) D. Parthiban, 176, P.V. Vaithiyalingam St, Old Pallavaram, ch-117.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

After obtaining approval Case was registered.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு -

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் -

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) -

Seperate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

M.Priya 31/08/26

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

31/08/2026 at 1300 hrs

Name: பெயர் M.PRIYA
Rank: நிலை Inspector of Police, Chennai city
No: எண் .....
Vigilance and Anti corruptia.
Chennai-16.

.....continuation of Column - 12 in FIR in Chennai, Vigilance and Anti - Corruption, Chennai City - I, FIR in Cr.No.07/AC/2026/CC-I U/s 7, 7A, 12 r/w 7 Prevention of Corruption Act as amended in 2018 and 106 BNSS.

இன்று 31.08.2026 ம் தேதி காலை 10.30 மணிக்கு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை நகரப் பிரிவு-1 காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்த போது 27.08.2026 ம் தேதி பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள் கொண்ட புகாரின் மேல் ஊழல் தடுப்பு மற்றும் காவல் கண்காணிப்புத்துறை உயர் அதிகாரிகளின் உத்தரவின் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் பின்வருமாறு அனுப்புநர், S.கவிதா, துணை ஆய்வுக்குழும அலுவலர், தனி வட்டாட்சியர், நில எடுப்பு (தேசிய நெடுஞ்சாலைகள்) செங்கல்பட்டு மாவட்டம், பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சென்னை-16. ந.க.எண்/ 1136-2024- அ1, நாள் 27.08.2026. அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு-துணை ஆய்வுக்குழும அலுவலர், தனி வட்டாட்சியர், நில எடுப்பு (தேசிய நெடுஞ்சாலைகள்) செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை - பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகம்- 27.08.2026 ம் தேதி திடீர் கூட்டாய்வு- மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக. பார்வை: செயல்முறைகள், ந.க.எண்/ 1136-2024- அ1, நாள் 27.08.2026. செங்கற்பட்டு மாவட்டம், பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்தில், நிலம் சம்மந்தமான ஆவணங்களை பதிவு செய்ய வரும் பொது மக்களிடமிருந்து, புரோக்கர்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் தனி நபர்கள் மூலமாக லஞ்சமாக பணம் வசூலிப்பதாக எனக்கும் மற்றும் சென்னை நகர பிரிவு-1 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கும் தொடர்ந்து கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், 27.08.2026 ம் தேதி மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் என்னுடன், சென்னை நகரபிரிவு-1 ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் காவல் அலுவலர்கள் இணைந்து இரு துறை திடீர் கூட்டாய்வினை

மாலை சுமார் 19.00 மணி முதல் இரவு சுமார் 23.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து ரூ.1,21000/- லஞ்ச பணம் கைப்பற்றப்பட்டது. மேற்கண்ட தொகை ரூ. 1,21,000/- மற்றும் இதர ஆவணங்களையும் பார்வையில் கண்ட செயல்முறைகளின் படி இத்துடன் இணைத்து மேல் நடவடிக்கைக்காக தங்களிடம் ஒப்படைக்கிறேன்.S.d-xxxxxx(S.கவிதா), துணை ஆய்வுக்குழும அலுவலர், தனி வட்டாட்சியர், நில எடுப்பு (தேசிய நெடுஞ்சாலைகள்) செங்கல்பட்டு மாவட்டம்.

செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக துணை ஆய்வு குழும அலுவலர் (தனி வட்டாட்சியர், நில எடுப்பு (தேசிய நெடுஞ்சாலைகள்) செங்கல்பட்டு மாவட்டம் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-1, காவல் துணை காவல் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (27.08.2026) 7வது மெயின் ரோடு நியூகாலனி, ஸ்ரோம்பேட்டை, சென்னை-600044 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை.

இருதுறை கூட்டுத் தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்	1) திருமதி.S. கவிதா, துணை ஆய்வுக் குழும அலுவலர், (தனி வட்டாட்சியர், நில எடுப்பு (தேசிய நெடுஞ்சாலைகள்) செங்கல்பட்டு மாவட்டம் 2) திரு. A.இம்மானுவேல் ஞானசேகர், காவல் துணை கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. 3) திருமதி.M.பிரியா, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

	4) திருமதி P.I.ஜோஸ்லின்மேரி, காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

சென்னை-44, குரோம்பேட்டை, நியூகாலனி 7வது மெயின் ரோடு, எண்-4 என்ற முகவரியிலுள்ள பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண பதிவு, வில்லங்க சான்றிதழ் மற்றும் ஆவண நகல் வழங்குவது சம்பந்தமான அரசு பணிகளுக்கு பொது மக்களிடம் சட்டத்திற்கு புறம்பாக கையூட்டு பெறுவதாகவும், இடைதரகர்களை அலுவலகத்தில் அனுமதித்து கையூட்டு பெற்று வருவதாகவும் கிடைத்த நம்ப தகுந்த தகவலின் அடிப்படையில் மேற்படி சார் பதிவாளர் அலுலகத்தில் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக துணை ஆய்வு குழும அலுவலர் (துணை ஆய்வுக் குழும அலுவலர்/தனி வட்டாட்சியர், நில எடுப்பு (தேசிய நெடுஞ்சாலைகள்) செங்கல்பட்டு மாவட்டம்) மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-1, காவல் துணை கண்காணிப்பாளர் இணைந்து இன்று (27.08.2026) மாலை சுமார் 7 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

இரு துறை திடீர் கூட்டு ஆய்வின் போது பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த பணியாளர்களை சோதனை செய்த போது வைத்திருந்த பணம் மற்றும் அதற்கு அவர்கள் அளித்த விளக்கம் பின்வருமாறு.

வ. எண்.	ஆஜரில் இருந்த அலுவலக ஆளிநர்கள்	வைத்திருந்த இருப்புத்தொகை	கையிருப்பு பதிவேட்டின் விவரம்	விவரம்
1.	திரு.R.தேவராஜி சார்பதிவாளர்,	ரூ.770/-	ரூ.1800/-	இவர் தான் வைத்திருந்த பணத்தில் மதிய

	பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகம்,குரோம்பேட்டை சென்னை-44			உணவிற்காக செலவு செய்த துபோக மீதி பணத்தை வைத்திருந்ததாக கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது
2,	திருமதி.G.ஜெயப்பிரபா, உதவியாளர், பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகம், குரோம்பேட்டை சென்னை-44	ரூ.30/-	ரூ.530/-	தான் வைத்திருந்த பணத்தில் தனது இருசக்கர வாகனத்திற்கு பெட்ரோல் போட்டது போக மீதி பணத்தை வைத்திருந்ததாக கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.
3.	திரு.A. அன்வர்அலி உதவியாளர், பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகம், குரோம்பேட்டை சென்னை-44.	ரூ.20/-	-	தான் தனது கைசெலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். அதிகம் உள்ள ரூ.20/- குறித்து கேட்டதற்கு தனது கைப்பையில் இருந்த சில்லறை காசு என கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது மேலும் இருப்பு பதிவேட்டில் எழுதவில்லை என்று தெரிவித்தார்.
4.	திரு.S. பாபு Data Entry Operator பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகம், குரோம்பேட்டை சென்னை-44.	ரூ. 20/-	-	இவர் தனது செலவிற்காக ரூ.20/- குறித்து கேட்டதற்கு தனது மணிபர்சில் இருந்த சில்லறை காசு என கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது
5.	திருமதி.S.மேரிகிளாரா Data Entry Operator	ரூ.200/-	-	இவர் தனது செலவிற்காக ரூ.200/- குறித்து கேட்டதற்கு தனது கைப்பையில் இருந்த

	பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகம், குரோம்பேட்டை சென்னை-44.			சில்லறை காசு என கூறினார். அந்த பணம் அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது

மேலும், அலுவலகத்தில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தனிநபர்களும் ஆஜரில் இருந்தனர், அவர்களின் விவரம் வருமாறு.

வ. எ ண்.	ஆஜரில் இருந்த தனி நபர்களின் விவரம்	வைத்திருந்த இருப்புத் தொகை	பணத்திற்கான விளக்கம்	விவரம்
1	திரு.முத்துசாமி த/பெ ராமசந்திரன், எண்.81/67, கண்ணபிரான் கோவில் தெரு, ஈசா பல்லாவரம், சென்னை-43	ரூ.1,06000/-	தான் புரோக்கர் வேலை செய்து வருவதாகவும் அதற்கான புரோக்கர் கமிஷன் பணம் என்று தெரிவித்தார்.	தான் புரோக்கர் வேலை செய்து வருவதாகவும் அதற்கான புரோக்கர் கமிஷன் பணம் என்று தெரிவித்தார். ஆனால் பணத்திற்கான எந்த ஆவணமும் இல்லாததால் அந்த பணம் சார்பதிவாளருக்கு கொடுக்க வந்த லஞ்ச பணமாக இருக்ககூடும் என்று கருதி கைப்பற்றப்பட்டது.
2	திரு.பார்த்திபன். த/பெ. தனபால், எண.176, பி.வி.வைத்தியலிங்கம் தெரு, பழைய பல்லாவரம், சென்னை-117	ரூ.14,200/-	தான் மகாலட்சுமி என்டர்பிரைசஸ் நிறுவனதத்தில் புரோக்கர் வேலை செய்து வருவதாகவும் அதற்கான புரோக்கர் கமிஷன் பணம் என்று தெரிவித்தார்.	தான் புரோக்கர் வேலை செய்து வருவதாகவும் அதற்கான புரோக்கர் கமிஷன் பணம் என்று தெரிவித்தார். ஆனால் பணத்திற்கான எந்த ஆவணமும் இல்லாததால் அந்த பணம் சார்பதிவாளருக்கு கொடுக்க வந்த லஞ்ச பணமாக இருக்ககூடும் என்று கருதி கைப்பற்றப்பட்டது.

3	திரு.V.அசோக்குமார் த/பெ. வெங்கடேசன், எண்.F-2, G1 சுதர்சன் சில்வர் டே அபார்ட்மெண்ட், சூர்யா அவென்யூ முதல் தெரு, குரோம்பேட்டை, சென்னை-44.	ரூ.44,600/-	தனது அப்பா தனது செலவிற்காக கொடுத்ததாக தெரிவித்தார்.	தான் சென்னை தரமணியில் உள்ள Standard Charted Business ல் delivery Manager ஆக பணிபுரிந்து வருகிறேன். இன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் சொத்து கிரயம் பதிவு செய்வதற்கு வந்ததாகவும் தன்னுடைய செலவிற்கு தனது அப்பா கொடுத்ததாகவும் தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணத்தினை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
4	செல்வி. பானு மேகலா த/பெ. ரம்பன் தியன், ஏண்.24, பெரிய தெரு, கீழ்கட்டளை, சென்னை-117	ரூ.14500/-	MODT செலவிற்காக கொண்டுவந்தத ாக தெரிவித்தார்.	சார்பதிவாளர் அலுவலகத்தில் MODT செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். இன்று ஆன்லைனில் செலுத்த இயலவில்லை என்று தெரிவித்தார். எனவே பணமாக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணத்தினை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
5	திரு.M,கனேசன், வயது-70 பி404, எம்.எப்.விகாசா அப்பார்ட்மெண்ட், நன்மங்கலம், சென்னை-129.	ரூ,7500/-	தனது செலவிற்காக வைத்திருந்ததா க தெரிவித்தார்.	தனது மகனுக்கு செட்டில்மெண்ட் செய்ய வந்ததாக தெரிவித்தார். மேலும் தான் புது துணி எடுக்க பணமாக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணத்தினை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

6	திரு.தமிழரசன் எண்.3, அர்ஜூனா தெரு, பொன்மேனி, மதுரை-625016.	ரூ.4900/-	தனது செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார்.	சென்னை கீழ்கட்டளையில் உள்ள தனது சொந்த வீட்டினை விற்பனை கிரையம் செய்ய வந்ததாக தெரிவித்தார். தனது செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணத்தினை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
7	திரு.பிராயதீஸ்வரன் த/பெ. ரவிந்தரன், எண்.13/6. ராமசாமி தெரு, தீட்சிதர் நகர், குரோம்பேட்டை, சென்னை/64	ரூ.10,000/-	தனது செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தா	தான் கிரைய பத்திரம் செய்ய வந்திருப்பதாக தெரித்தார். மேலும் தனது செலவிற்காக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணத்தினை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.
8	திருமத.P.மணிமேகலை க/பெ. பழனிசாமி பிளாட் எண்.3137, பிரெஸ்டீஜ் பார்க் ஸ்கொயர், பிரம்கட்டட ரோடு, பெங்களூரு 560083	ரூ.50,000/-	MODT செலவிற்காக கொண்டுவந்ததாக தெரிவித்தார்.	சார்பதிவாளர் அலுவலகத்தில் MODT செலவிற்காக கொண்டு வந்ததாக தெரிவித்தார். இன்று ஆன்லைனில் செலுத்த இயலவில்லை என்று தெரிவித்தார். எனவே பணமாக வைத்திருந்ததாக தெரிவித்தார். அவர் வைத்திருந்த பணத்தினை திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

மேலும், பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்தின் அனைத்து இடங்களிலும் சோதனை செய்ததில் சார்பதவாளரின் அலுவலகத்தின் உள்ளளே கம்ப்யூட்டர் ஆப்ரேட்டர்ஸ் அறையில் கடைசியாக உள்ள ஒரு கணிப்பொறியின் மேசைக்கு கீழே ரூ.500/- கண்டெடுக்கப்பட்டது அந்த பணம் குறித்து விசாரித்த போது யாரும் உரிமை கோரி முன் வராததால் அந்த பணம் லஞ்ச

பணமாக இருக்க கூடும் எனக் கருதி கைப்பற்றப்பட்டது. மேலும் அந்த அறையின் ஜன்னலுக்கு வெளியே சுருட்டிய நிலையில் இரண்டு 100/- ரூபாய் நோட்டுகள் இருந்தது அந்த பணத்தையும் உரிமை கோர முன்வராததால் லஞ்ச பணமாக இருக்க கூடும் என கருதி கைப்பற்றப்பட்டது.

கைப்பற்றப்பட்ட பணத்தின் விவரம் வருமாறு.

வ.எண்.	பணம் கைப்பற்றப்பட்ட நபரின் பெயர் விலாசம்	தனிநபர்/புரோக்கர்/ அலுவலர்	கைப்பற்றபட்ட தொகையின் விவரம்
1	திரு.முத்துசாமி த/பெ ராமசந்திரன், எண்.81/67, கண்ணபிரான் கோவில் தெரு ஈசா பல்லாவரம், சென்னை-43	புரோக்கர்	ரூ.1,06000/-
2	திரு.பார்த்திபன், த/பெ. தனபால், எண.176, பி.வி.வைத்தியலிங்கம் தெரு, பழைய பல்லாவரம், சென்னை/117	புரோக்கர்	ரூ.14,200/-
3	சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்து கண்டெடுக்கப்பட்ட கணக்கில் வராத பணம்	அலுவலகத்தில்	ரூ.800/-
		மொத்தம்	ரூ.1,21,000/-

மேலும் அந்த அறையில் ஒரு கணிப்பொறியின் முன் அமர்ந்திருந்த திரு.S.வினோத் த/பெ. சதாநந்தம் நபரை விசாரணை செய்ததில் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளர் சொல்லும் சின்ன சின்ன வேலைகளை செய்து வருவதாகவும் தினக்கூலியாக ரூ.600/- முதல் ரூ.800/- வரை தருவதாக தெரிவித்தார். திரு..ரமேஷ் த/பெ.பரமசிவம் என்ற நபரை விசாரித்த போது தான் பல்லாவரத்தில் உள்ள தனியார் பள்ளியில் உடற்கல்வி ஆசியராக தற்காலிகமாக வேலை செய்து வருவதாகவும் புரோக்கர் வேலை செய்து

வருவதாகவும் இன்று சார்பதிவாளர் அலுவலகத்தில் புரோக்கர் வேலை செய்ய வந்ததாக தெரிவித்தார்.

மேற்படி கம்ப்யூட்டர் ஆப்ரோட்டர்ஸ் அறையில் உள்ள கேமரா வேலை செய்ய வில்லை. பழந்தடைந்த நிலையில் உள்ளது. இது குறித்து சார்பதிவாளர் அவர்களிடம் விசாரித்த போது சரியான முறையில் பதிலளிக்கவில்லை. சோதனையின் போது இந்த அறையில் தனிநபர்கள் அமர்ந்திருந்தனர். மேற்குறிப்பிட்ட சந்தேகத்திற்குரிய தொகை ரூ.1,21,000 /- (ஒரு லட்சத்து இருபத்தொராயிரம் மட்டும்) சார்பதிவாளர் மற்றும் நபர்கள் சரியான முகாந்திரம் கூறாததால், சார்பதிவாளர் அவர்களுக்கு கையூட்டாக கொடுக்க கொண்டு வரப்பட்ட பணம் என கருதி கைப்பற்றப்பட்டது.

இன்று 27.08.2026-ந்தேதி காலையிலிருந்து 71 ஆவணங்கள் மற்றும் 3 திருமண ஆவணங்கள் மற்றும் 2 Adjudication ஆவணம் பதியப்பட்டுள்ளது. மற்றும் சம்மந்தப்பட்ட விவரத்தினை கணினி நகல் எடுத்து சான்றாவணமாக கொடுத்தார். மேலும் மேற்படி இரு துறை கூட்டு ஆய்வின் போது பல்லாவரம் சார் பதிவாளர் அலுவலகத்தின் 1) சார்பதிவாளர் அலுவலர்களின் வருகைப் பதிவேடு ஆகஸ்ட் மாதம் 2026 நகல் (3 பக்கங்கள்), 2) Data entry operator வருகைப் பதிவேடு ஆகஸ்ட் மாதம் 2026 நகல் (3 பக்கங்கள்), 3) தனி நபர் பண இருப்பு பதிவேட்டின் தேதி 27.08.2026 நகல் (2 பக்கங்கள்) மற்றும் 4) இயக்கப்பதிவேடு-ஆகஸ்ட் 2026 நகல் (3 பக்கங்கள்) ஆகியவற்றில் சார்பதிவாளர் சான்றொப்பம் பெற்று நகல் விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.

இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (27.08.2026) இரவு சுமார் 23.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த இரு துறை கூட்டுத் தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது.

Encl:. (I)Statement of Tr.R.Devarajan, Sub-Registrar 2) Explanation of Tr.Muthusamy (Private Person) and 3)Tr.Parthiban (Private Person) Sd.xxxx. (S.Kavitha), Deputy Inspection Cell Officer /Special Tahsildar Land Acquisition (National Highways Department), Chengalpet District. Sd.xxxx. (A.Immanual Gnanasekar), Deputy Superintendent of Police, CC-I, V & AC, Chennai - 16. Sd.xxxx. (M.Priya), Inspector of Police, CC-1, V & AC, Chennai - 16. Sd.xxxx. (P.I.Joselin Mary), Inspector of Police, CC-I, V & AC, Chennai - 16. Sd.xxxx. (R.Devarajan), Sub-Registrar, Pallavaram SRO Office, Chromepet.

Sir, Received the above complaint with enclosures and a case was registered in V&AC, CC-I Detachment Cr.No.07/AC/2026/CC-I U/s 7, 7A, 12 r/w 7 Prevention of Corruption Act as amended in 2018 and 106 BNSS on 31.08.2026 at 10.30 hrs.

The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, Statements and copies of records are submitted before the Hon'ble Principal Sessions District Judge, Chengalpattu and other copies are submitted to the concerned officers.

M.P.S 31/08/26

INSPECTOR OF POLICE
CHENNAI CITY-I DETACHMENT
VIGILANCE & ANTI CORRUPTION
CHENNAI-600 016.